https://www.udir.no/eksamen-og-prover/eksamen/ta-fag-som-privatist/#a194123

தமிழ் மொழியை வேற்றுமொழியாக உயர்கல்வித் தேர்வு எழுத விரும்பும் மாணவர்களுக்கான தகவல்!

அன்பார்ந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு,

தமிழ் மொழியை வேற்றுமொழியாக உயர்கல்வித் தேர்வாக எழுத விரும்பும் மாணவர்களுக்கான முக்கிய தகவல்கள் கீழே வழங்கப்படுகின்றன.

தேர்வு நிலைகள்

தேர்வு பின்வரும் மூன்று நிலைகளில் நடைபெறும்:

நிலை 1 (Nivå 1)

நிலை 2 (Nivå 2)

நிலை 3 (Nivå 3)

பதிவு செய்யும் காலம்

01.09.2026 முதல் 15.09.2026 வரை

பதிவுக்கான கடைசித் திகதி

15.09.2026

கடைசித் திகதிக்கு முன்னர் பதிவு செய்வதை மாணவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## உள்நுழைவு மற்றும் பதிவு

தேர்வுக்கு பதிவு செய்ய விரும்பும் மாணவர்கள், பதிவு இணையதளத்தில் உள்நுழைவதற்கு பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றைக் கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும்:

MinID

BankID

## எவ்வாறு பதிவு செய்வது?

மாணவர்கள் தங்களது பள்ளி தேர்வுப் பதிவிற்குப் பயன்படுத்தும் அதே பதிவு இணையதளத்தின் (påmeldingsportal) வழியாகவே பதிவு செய்ய வேண்டும்.

பதிவு செய்வதற்கான நடைமுறைகள் குறித்து சந்தேகம் இருப்பின், உங்கள் பள்ளி அல்லது தொடர்புடைய நிர்வாகத்திடம் விசாரித்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

## மேலதிக தகவல்கள்

தேர்வு, பதிவு மற்றும் பிற நடைமுறைகள் தொடர்பான மேலதிக தகவல்களை Utdanningsdirektoratet (UDIR) இணையதளத்தில் காணலாம்:

UDIR – தேர்வு தொடர்பான தகவல்கள் https://www.udir.no/eksamen-og-prover/eksamen/ta-fag-som-privatist/#a194123

சிறப்பு வகுப்புகள் பற்றிய அறிவிப்பு

தமிழர் வள ஆலோசனை மையம் (TRVS) சார்பில், தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்காக சிறப்பு வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன.

இந்த வகுப்புகள்:

நேரடி வகுப்பறை வழியாகவும்

இணையவழி / டிஜிட்டல் முறையிலும்

நடைபெறும்.

வகுப்புகளின் கால அட்டவணை, பதிவு மற்றும் பிற நடைமுறை தொடர்பான மேலதிக தகவல்கள் செப்டம்பர் மாத இறுதியில் அறிவிக்கப்படும்.

"தமிழ் எங்கள் அடையாளம்"

இவ்வண்ணம்,

தலைமை நிருவாகம்

அன்னை பூபதி தமிழக் கலைக்கூடம்6